ஆண்டுகளில் அதற்காகத் தனியாக அதிகாரிகளைப் போட்டு, எவ்வளவு சீக்கிரம் கொடுக்க முடியுமோ அவ்வளவு சீக்கிரம் கொடுக்க ஆணையைப் பிறப்பித்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் சொன்னபடி. இவருடைய கோரிக்கை நீண்ட நாட்களாக இருந்து வந்தது. தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய கவனத்திற்கு முறையாக 28-4-1995 அன்று கொண்டு வரப்பட்டது. அன்றே, புரட்சித் தலைவி அவர்கள் ஆணையிட வேண்டும் என்று உத்திரவிட்டார்கள். அன்றே ஆணையிடப்பட்டது. அன்றே என்றால் 28-4-1995. அதன்படி, தொட்டிநாயக்கர் மற்றும் அதற்குள்ளடங்கிய ராதாகம்பளம். கொல்வார், சில்வார், தொக்குவாளர் மற்றும் தொழுவை நாயக்கர் ஆகிய வகுப்பைச் சேர்ந்த அனைவருக்கும் இதுவரையிலும் கோட்டாட்சியரைக் கொண்டு சாதிச் சான்றிதழ் கொடுத்து வருகிறார்கள். 28-ஆம் தேதியிலிருந்து அந்தந்த வட்டாட்சிகளில் கொடுப்பார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 503, 504, 505 மற்றும் 506 ஆகிய வினாக்கள் மாண்புமிகு அமைச்சர்களின் வேண்டுகோளுக்கிணங்க பின்னர் எடுத்துக்கொள்ளப்படும்.

வினா எண் 507, திரு. கே. ஏ. மனோகரன் மற்றும் திரு. மு. வெங்கடராம ரெட்டி. இருக்கையில் இல்லை.

வினா எண் 508, திரு. வீ. சுப்பிரமணியன், இருக்கையில் இல்லை.

வினா எண். 509. திரு. இரா. அப்பு நடேசன், மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்.

முற்பகல் 10-05

509—

திருவட்டார் பேரூராட்சியில் மின்மாற்றி அமைத்தல்

*** 24657 - திரு. இரா. அப்பு நடேசன்:**

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவட்டார் பேரூராட்சியில், திருவரம்பு. அம்பாங்காலை, பாடகசேரி, அஞ்சுகண்டறை போன்ற கிராமப் பகுதிகளில் உள்ள குறைந்த மின் அழுத்தத்தை சரி செய்ய ஒரு மின்மாற்றி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமைக்கப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): திருவட்டார் பேரூராட்சியில் திருவரம்பு பகுதியில் 31-3-1995-ல் அதிகத் திறன்கொண்ட கம்பிகள் போடப்பட்டு உள்ளன. தற்சமயம் அங்கு மின் அழுத்தம் சீராக உள்ளது. அம்பாங்காலை கிராமப் பகுதியில் உள்ள மின் அழுத்தத்தைச் சரிசெய்யும் செயற்குறிப்பு தமிழ்நாடு மின்சார வாரியத்திடம் உள்ளது. பாடகசேரி மற்றும் அஞ்சுகண்டறை பகுதிகளில் புதிய மின்மாற்றிகள் 1995 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்திற்குள் அமைத்து முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரா. அப்பு நடேசன்: பேரவைத் தலைவர் அவர்களே, திருவரம்பிலே மின்மாற்றி அமைக்கப்பட்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னதற்கு நன்றி கூறிக்கொண்டு, அம்பாங்காலை போன்ற மற்ற இடங்களிலே வருகின்ற காலகட்டங்களிலே முடிக்கலாம் என்றும் சொன்னார்கள். உண்மையிலே அங்கே தாழ்த்தப்பட்டவர்களும், வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்கின்ற மிகத் தாழ்ந்தவர்களும், ஏழை மக்களாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இந்த ஆண்டிலே மின் மாற்றிகளை அமைத்து, வோல்டேஜை அபிவிருத்தி செய்து கொடுக்க அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே தெரிவித்ததைப்போல 1995- ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்திற்குள் அந்தப் பகுதிகளில் மின்மாற்றிகள்—புதிய டிரான்ஸ்பார்மர்கள்- அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரா. அப்பு நடேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுக்கு நன்றி. அங்கெல்லாம் இந்த மின் அழுத்தக் குறைவுக்குக் காரணம் அங்கே சப்-ஸ்டேஷன் இல்லை; அது தேவைப்படுகிறது. அதற்கான ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கின்றன. வி. என். ஊரிலே சப்-ஸ்டேஷன் இந்த ஆண்டிலே துவங்கி மின் அழுத்தக் குறைவைச் சீர்செய்து தருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின் அழுத்தக் குறைபாடு என்பது பல்வேறு இடங்களிலே இருக்கின்ற காரணத்தினாலேதான் நம்முடைய ஆட்சிக் காலத்திலே புரட்சித் தலைவி அவர்கள் கடந்த நான்கு ஆண்டுக்

காலமாக அதற்காகப் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து அதிகபட்சமாக துணை மின் நிலையங்களை அமைத்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த ஆண்டு எல்லாப் பகுதிகளிலேயும் மின் அழுத்தத்தைச் சீர் செய்வதற்காகத்தான் ஒரு புதிய திட்டத்தை உருவாக்கி, 100 துணை மின்நிலையங்களை அமைக்க வேண்டுமென்று தெரிவித்து இருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே நம்முடைய தமிழ்நாடு மின்சார வாரியம் இதற்கான கணக்குகளை எடுத்துக் கொண்டிருக்கிறது. எந்த எந்தப் பகுதிகளில் துணை மின்நிலையங்களை அமைக்கலாம், எங்கெங்கு குறைந்த மின் அழுத்தம் இருக்கிறது என்பதையெல்லாம் கண்டுகொள்வதற்கான ஆய்வு செய்யும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஆகவே, அதற்காக இறுதிப் பட்டியலையும் அவர்கள் தயாரித்துக் கொண்டு இருக்கிறார்கள். ஆகவே, இந்தப் பகுதியிலே, இப்படிப்பட்ட சூழ்நிலை இருக்குமானால், அதிகாரிகளோடு கலந்து ஆலோசித்து, அந்தப் பகுதிகளில் தேவையான நிலம் இருக்குமானால், அதையும் அக்வையர் செய்து, அந்தப் பகுதிகளிலே துணை மின் நிலையம் அமைப்பதற்கான நடவடிக்கையை அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 510, டாக்டர் பெ. வீரபாண்டியன், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

510—

செங்கம் நகரில் சிறுதொழில் பெருக நடவடிக்கை

* **44553**—*டாக்டர் பெ. வீரபாண்டியன்:*

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கம் நகரில் சிறுதொழில் பெருக சிட்கோ மூலம் உள்ளமைப்பு ஏற்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், நடப்பு நிதியாண்டில் செயல்படுத்தப்படுமா?

மாண்புமிகு திரு. துரை ராமசாமி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை

(ஆ) இவ்வினா எழவில்லை.